## 27. தவம்

**261.** *உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற் குரு*

**'தவத்தின்' குணம் என்னவெனில்**
**'தன்' துன்பத்தைப் பொறுத்துக் கொள்வது மட்டுமல்ல**
**தன் போன்ற பிற உயிர்களுக்கும்**
**தக்கதொரு துன்பத்தைச் செய்யாது இருத்தலே !**

**262.** *தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை*
*அஃதிலார் மேற்கொள் வது*

**"தவம்" மனத் திடமும் ஈடுபாடும்**
**தன்னகத்தே கொண்டவர்க்கே உறுதியாகும் !**
**தகுதிகள் தக்கபடி இல்லையெனில்**
**தவத்தை மேற்கொள்வது வீணே !**

**263.** *துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்*
*மற்றை யவர்கள் தவம்*

**துறவறம் மேற் கொண்டவர்களுக்குத்**
**துணை நிற்க வேண்டி**
**இல்லறம் மேற் கொண்டவர்கள்**
**இனிய தவத்தை மறந்தனரோ ?**

**264.** *ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும்*
*எண்ணின் தவத்தான் வரும்*

**எண்ணிய மாத்திரத்தில்**
**எதிரிகளை வீழ்த்தவும், நண்பரைக் காக்கவும்**
**எண்ணத்தில் உறுதியும் கட்டுப்பாடு**
**என்கின்ற தவமும் இருந்தால் இயலும் !**

**265.** *வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்*
*ஈண்டு முயலப் படும்*

**விரும்பியதை விரும்பியவாறு**
**வென்றிடுவது தவம் ! ஆகவே**
**விரைந்து இல்லறத்தாரும்**
**வியத்தகு தவத்தை முயல வேண்டும் !**

266. *தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்*
*அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு*

**தவம் மேற்கொண்டவர்கள் மட்டுமே**
**தம் கருமத்தில் கண்ணாயிருப்பர் !**
**அப்படித் தவம் மேற்கொள்ளாதார் வீணே**
**அவதிப் படுவர் ஆசைப்பட்டு !**

267. *சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பஞ்*
*சுடச்சுட நோற்கிற் பவர்க்கு*

**சுடச் சுடச் துன்பங்கள் வருத்திச்**
**சுட்டாலும் தவம் மேற் கொள்வோர்**
**சுட்டிக் காட்டிய குறிக்கோளை நோக்கிச் சென்று**
**சுடரும் பொன் போல் ஒளி விடுவர் !**

268. *தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய*
*மன்னுயி ரெல்லாந் தொழும்*

**‘தன்னுயிர்’ என்கின்ற பற்றும்**
**‘தான்’ என்கின்ற இறுமாப்பும்**
**மருந்துக்கும் இல்லாதவர்களை**
**மண்ணில் உள்ள மற்ற உயிர்களெல்லாம் தொழும் !**

269. *கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்*
*ஆற்றல் தலைப்பட் டவர்க்கு*

**தாங்க முடியாத துன்பங்கள் வந்தாலும்**
**தாங்கிக் கொண்டு – வாழ்க்கையில் குறிக்கோள்**
**தான் குறி எனத் தவ வலிமையானவர் எமனையும்**
**தாண்டும் உறுதி படைத்தவர் ஆவார் !**

270. *இலர்பல ராகிய காரணம் நோற்பார்*
*சிலர்பலர் நோலா தவர்*

**இல்லாதவர் பலராகவும்**
**இருப்பவர் சிலராகவும்**
**இருப்பதற்குக் காரணம் – முயற்சியில்**
**இருப்பவர் சிலரே ! இல்லாதவர் பலரே !**